
உ

# நவ பாரதம்



இலக்கிய கலாநிதி, பண்டிதமணி

## சி. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவ பாரதம்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி

**சி. கணபதிப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | நவ பாரதம் |
| ஆக்கியோன் | : | இலக்கிய கலாநிதி, |
| | | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை |
| 1ம் பதிப்பு | : | 2011-02-07 |
| பதிப்புரிமை | : | சி. சதாசிவம் |
| | | பண்டிதமணி இல்லம், |
| | | கலாசாலைவீதி, |
| | | திருநெல்வேலி. |
| விற்பனை | : | தனலக்குமி புத்தகசாலை, |
| | | கலாசாலை வீதி, |
| | | திருநெல்வேலி. |
| வெளியீடு | : | பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபை |
| அளவு | : | A-5 70gsm Bank |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், |
| | | ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, |
| | | யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

நாவலர் காவிய பாடசாலையில் கல்வி கற்று மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதராகவும் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் விளங்கிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் திருநெல்வேலி சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முப்பது வருடகாலம் தமிழ் சமய விரிவுரையாளராகக் கடமையாற்றினார். அக்காலகட்டத்திலும் அதன் முன்பும் பின்பும் மேற்குறித்த தமிழ், சமய சம்பந்தமாக ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகளை அவர் எழுதிக்குவித்தார். அவரால் எழுதப்பட்ட முன்னுரைகள், அணிந்துரைகள் அநேகம். இவையாவும் நூலுருப் பெற வேண்டுமென்பதே பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபையினரின் வேணவாவாகும். அவற்றுட் பல நூலுருப் பெற்றிருக்கின்றன. மிகுதியினையும் நூலுருவாக்க வேண்டுமென்பதே எமதெண்ணம்.

இலக்கியம் கற்பித்தலில் தனி முத்திரை பதித்தவர் எங்கள் பண்டிதமணி. இலக்கியங்களுக்கு நயம் காணுதலும் விமர்சனம் செய்தலும் அவர்களுக்கு இறைவன் கொடுத்த தனிக்கொடை. அவர்களது நூற்றுப்பன்னிரண்டாவது பிறந்த தினத்தையொட்டி அங்கதச் சுவை நிரம்பிய நவபாரதம் என்னும் நூல் இப்பொழுது வெளியிடப்படுகின்றது. மேலும் இதனுடன் சேர்த்து வெளியிடப்படும் கண்ணகி தோத்திரம் மட்டுவில் பன்றித் தலைச்சியில் உள்ள கண்ணகியம்பாள்மீது அவர்கொண்ட பக்தியை வெளிக்காட்டுகின்றது. இது 1938ம் ஆண்டு ஆக்கப்பட்டு இப்பொழுது வெளியாகின்றது. இந்நூலைப் பலரும் படித்து - சுவைத்து இன்புறுவோமாக.

"பண்டிதமணி இல்லம்"
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
02-07-2011

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் கண்ணகி தோத்திரம், நவபாரதம் என்னும் இரண்டினையும் சேர்த்துப் பண்டிதமணி இல்லத்தினர் சிறுநூலாக வெளியிடுவதை அறிந்த மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பண்டிதமணி பற்றி ஆய்வினை மேற்கொள்ளுபவர் களுக்கு இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

ஈழத்து மரபுவழித் தமிழ்க்கல்வி, புலமைப் பாரம்பரியத்தின் கடைசிக் கொழுந்தாக எம்மிடையே வாழ்ந்து மறைந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பல்பரிமாண ஆளுமைகளைப் பலரும் பலவாறாக நோக்கியும் எழுதியும் ஆராய்ந்துமுள்ளனர். இப்போது வெளிவரும் இந்த நூலில் இடம் பெறும் இரண்டு விடயங்கள் பற்றியும் விரிவான ஆய்வுகள் வெளிவந்தன என்று கூற முடியாது. பண்டிதமணியைப் பற்றி ஆய்வு செய்தவர்களும் இவற்றைத் தொட்டுக் காட்டினாரேயன்றி ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு விடயங்களுக்கும் பின்னணியாகச் சமயமும் சமூகமும் இருந்தது என்பது மிகவும் முக்கியமான அம்சமாகும்.

1899ஆம் ஆண்டு பிறந்த பண்டிதமனி 1986 ஆம் ஆண்டு அமரர் ஆயினார். இவரது வாழ்வு பற்றிய செய்திகளை அவ்வப்போது இவர் எழுதிய கட்டுரைகளினூடு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. பண்டிதமணி தனது சுயசரிதத்தினை எழுதியிருந்தால் இன்று சர்ச்சைக்குரிய விடயங்கள் பலவற்றிற்கு விடை கிடைத்திருக்கும்.

பண்டிதமணியின் வாழ்வோடு தொடர்புடைய விடையங்களைக் கனகசெந்திநாதன், வித்துவான் செபரத்தினம், க.சி.குலரத்தினம், நீர்வேலி இ.சிதம்பரப்பிள்ளை முதலானோர் எழுதியுள்ளனர். பண்டிதமணி பற்றிய ஆய்வுகளும் பல்கலைக்கழக மட்டத்திலே செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணியின் மாணவர்கள் இலங்கையின் பலபாகங்களிலும் ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர். முப்பது வருடகாலமாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பண்டிதமணியைக் 'கடவுளாகக் கருதும்' மாணாக்கர் பரம்பரையொன்றும் இருந்தது. மாணாக்கர் பரம்பரை பண்டிதமணியின் திறன்களை வாய்மொழியாகப் பாடசாலைகளூடு கையளித்துள்ளது. குறிப்பாக அவரது பேச்சுக்கலை, படிப்பித்தற்பாணி, நகைச்சுவைகள் முதலானவற்றை அவரது மாணாக்கர் பரம்பரையிடமிருந்து கேட்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளோம், அத்துடன் பண்டிதமணியின் குடும்பத்தினர், உறவினர்கள் மூலமாகவும் பண்டிதமணியின் ஆளுமை பற்றிய விபரங்களையும் அறிய முடிந்தது. இவைகள் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை. விரிவுரை நிகழ்த்தும்போது - மேடைப் பேச்சின் போது - பண்டிதமணி கூறிய உப கதைகள் 19ஆம் நூற்றாண்டுத் தமிழர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள், நகைச்சுவைகள் முதல்லானவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடலாம் என்று கருதுகின்றேன்.

பண்டிதமணியின் வாழ்வியலை 1899-1917, 1918-1926, 1927- 1928, 1928-1959, 1960 - 1986 என்ற காலப்பகுதியாகப் பகுத்து ஆய்வு செய்வது புதிய பல பரிமாணங்களைத் தரலாம் என்று நம்புகிறேன். அவரின் ஆக்கங்களைக் கால ஒழுங்கிலே ஆராய்பவர்கள் அவரின் கருத்தியல் போக்கினை, மாற்றத்தை, முதிர்ச்சியை நன்கு அவதானிப்பர்.

இங்கு வெளிவரும் கண்ணகி தோத்திரம் பண்டிதமணி அவர்களால் குரோதன ஆண்டு பங்குனியில் (1926) பாடப்பட்டது. 1925 இல் மட்டுவிலிலே ஒரு காவிய பாடசாலையை "லோச்" சொல்லப்பா என்பவர் தொடக்கி வைத்தார். அவ் வகுப்பைப் பண்டிதமணி இராக்காலங்களிலே நடாத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காவிய வகுப்பு மாணவர்கள் விழாக்காலங்களிலும் விசேட காலங்களிலும் கண்ணகி தோத்திரம் படிக்க வேண்டுமென்பது திரு. செல்லப்பா அவர்களின் நிபந்தனை. அதன் பொருட்டு அப்பொழுது இயற்றப்பட்டது கண்ணகியம்மை தோத்திரம். இத்தோத்திரம் பற்றிய நினைவு "கனவாய் பழங்கதையாய் போனது"

(கண்ணகியம்மை தோத்திரம், முகவுரை 1966)

என்று பண்டிதமணி குறிப்பிட்டுள்ளமை மிகுந்த அவதானிப்புக்குரியது.

பண்டிதமணி அவ்வப்போது எழுதிய கவிதைகள் தொகுக்கப்படவில்லை. அவை தொகுக்கப்பட்டால். பண்டிதமணியின் கல்வித்துவ ஆற்றலை முழுமையாகக் கண்டு கொள்ள முடியும். பண்டிதமணியின் உரைநடை பற்றிக் குறிப்பிட்ட பலரும் கவித்துவம் வாய்ந்த உரை நடை என்று குறிப்பிட்டுள்ளனர். பண்டிதமணியிடம் கவித்துவம் இருந்தது. ஆனால் அவர் கவிதை எழுதுவதில் அதிகம் ஈடுபடவில்லை.

பண்டிதமணி எழுதிய கவிதைகள் மரபுதழுவிய வடிவும் பொருளும் கொண்டவை. அவரது கவிதைகளை வழிபாடு, வாழ்த்து, இரங்கல் தொடர்பானவைகள் என்று பகுத்துப் பார்க்கலாம்.

கண்ணகி தோத்திரம் பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மன் பேரில் பாடப்பட்டது. கண்ணகியின் வரலாறு, தெய்வீகத் தன்மை, பன்றித் தலைச்சிப் பதியின் சிறப்பு முதலானவற்றை இத்தோத்திரம் கூறுகின்றது. மாணாக்கர்கள் வழிபாட்டின் போது பாடுவதற்கேற்ற யாப்பு வடிவத்தினைத் தெரிந்தெடுத்துப் பாடியமை பண்டிதமணி பெற்றிருந்த செய்யுட் பயிற்சியைப் பலப்படுத்துகிறது.

"மாமதுரை வீதி தனிற் சென்றனையே
மாதுயர மெய்தியுளங் கன்றினையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோவல னுயிர்த் தெழும்பக் கண்டனையே
கொழுநன்பிரி வாற்றுயரங் கொண்டனையே"

"கங்கா தீர்த்தம் உன்றீர்த்தம்
கடுநோய்க் கவுடத முன்றீர்த்தம்
அற்புதம் அற்புதம் அவைகோடி
அளவிடற் குறையுமென் மனங்கோடி"

பண்டிதமணியின் கவித்துவத்தை இத்தகைய பாடல்களினூடு கண்டு கொள்ளலாம். இன்னும் ஊஞ்சல், பதிகம் முதலியவற்றையும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணி அவர்கள் தம் அன்புக்குரியவர்களுக்கு வாழ்த்துக் கவிகளும் எழுதியுள்ளார். 'ஈழகேசரி' பொன்னையாவின் மகளின் திருமணத்திற்குப் பாடிய வாழ்த்துப் பாடல், கலாநிதி சு. வித்தியானந்தனுக்குப் பாடிய வாழ்த்துப்பாடல் முதலியன மிகவும் சிறப்பானவை. கி. வ. ஜகன்நாதன் அவர்கள் பண்டிதமணிக்குக் கவிதையிலே கடிதம் எழுதினார். அதற்குப் பதிலை பண்டிதமணி கவிதையாகவே எழுதினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணி எழுதிய இரங்கற்பாக்களும் விதந்து குறிப்பிடக்கூடியவை. தன்னுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்ட நண்பர்களுக்கு மாத்திரமே இவர் இரங்கற்பாக்கள் பாடினார் என்பது. குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணியோடு ஆசிரிய கலாசாலையில் உடன் மாணக்கராகப் பயின்ற கரவெட்டியைச் சேர்ந்த பண்டிதர் க. சின்னத்தம்பி அவர்கள் மிக இளமையிலே இறந்தபோது அவரின் பேரில் சில இரங்கற் பாக்களைப் பாடினார். பண்டிதர் சின்னத்தம்பி பல தனிப்பாடல்களையும் பதிகங்களையும் பாடியவர். இவரின் செல்வச் சந்நிதி முருகன் மான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதூது பண்டிதமணியை மிகவும் கவர்ந்தது என்பதை அவர் கூறக்கேட்டுளோம். பண்டிதர் சின்னத்தம்பி இறந்தபோது பண்டிதமணி பாடிய ஒரு பாடலைச் சுட்டிக்காட்டலாம்:

"சிந்தித்த சிந்தித்த வாறுசெய்
திருச் செந்தியில் வாழ்
கந்தற் கொருமணி மாலை செய்தான்
கரவைப் பதியில்
முந்துற்ற முத்தனையான் சின்னத்தம்பி
முதிர்ந்த நண்பன்
வந்துற்ற நோயொழிந் தோடிட
வாழ்வு வரும் பொருட்டே"

நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இறந்த போது இவர் பாடிய இரங்கற்பாக்களைப் பலரும் மேற்கோளாகக் காட்டியுள்ளனர். சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர் இறந்த போது பண்டிதமணி பாடிய இரங்கற்பாக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பண்டிதமணி கவிதைத்துறையில் பெருமளவு ஆர்வம் காட்டாத போதும் அவர் அவ்வப்போது எழுதிய கவிதைகளினூடு அவரது கவித்துவத்தைக் கண்டு கொள்ள முடிகின்றது. அவற்றைத் தேடி தொகுத்து வெளியிட வேண்டுமென்று பண்டிதமணி இல்லத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதில் இடம் பெறும் நவபாரதம் 1938ஆம் ஆண்டு வெளிவந்த ஈழகேசரி ஆண்டு மடலிலே "ஜயோதிர்மகிஷம் சாதேவ சாஸ்திரிகள்" என்னும் புனைபெயரிலே பண்டிதமணி நவபாரதத்தினை எழுதினார். பண்டிதமணி தனது மனதை உறுத்திய பொருள் ஒன்றை உள்வாங்கி நகைச்சுவை விரவிவர ஒருவகைப் புத்திலக்கியமாக நவபாரதத்தினை எழுதினார் என்று கூறப்படுகின்றது. அக்காலத்திலேயே பலராலும் பேசப்பட்ட ஒரு படைப்பாக இது இருந்தது என்று அறிய முடிகின்றது. சமகால நிகழ்வைப் புராண இதிகாசக் கதைகளினூடாகச் சொல்லும் மரபு குறிப்பாகச் சிறுகதைத் துறையிலே தலைகாட்டத் தொடங்கிய காலத்திலே தான் இந்த நவபாரதமும் தோன்றியது என்பதும் குறிப்பிடத்தக்கது. நவபாரதம். நல்லதொரு சிறுகதை என்று கலாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. குணராசா குறிப்பிட்டுள்ளார். பண்டிதமணிக்கு நாவல் சிறுகதையோடு நல்ல பரிச்சயம் இருந்தது என்பது யாவரும் அறிந்ததே.

நவபாரதம் (1938) பண்டிதமணியின் உரைநடைச்சிறப்புக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. பண்டிதமணியின் இரசனை உணர்வு அவரது உரைநடையினூடு தெளிவாகத் தெரிகின்றது. பேச்சுவழக்குச் சொற்களை இடமறிந்து பயன்படுத்துவதில் பண்டிதமணி கைதேர்ந்தவர். நவபாரதத்தில்; இடறுகட்டை, பழங்கறள், என்னாணை, ஒருமயிருமில்லை, குறுக்காலைபோனது, அலுவல், இஞ்சை, புழுகு முதலான பேச்சு வழக்குச் சொற்களும் பொருத்தமான இடத்திலேயே பொருத்தமுற அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

நவபாரதத்தின் முடிவிலே கையடையாளம் இடப்பட்டுக் குறிப்பு: என்று ஒரு பகுதி இடம் பெற்றுள்ளது. அது பின்வருமாறு :

> "இனிச் சாந்தி பருவத்தில் பரமண்டல விளக்கம் சீவனைப் போட்டுவைத்தால் வருகிற ஆண்டு மடலிலே நடக்கும். இப்படியே நவராமாயணம் அல்லது புதுராமாயணம் என்றும் வந்தாலென்ன? இந்த உலகமே வெறுங்கற்பனை யல்லவா? சாந்தி! சாந்தி!!

இது ஒரு கற்பனைப் படைப்பு என்று பண்டிதமணி தரும் குறிப்பு மிகவும் முக்கியம் வாய்ந்தது.

பண்டிதமணியின் ஆற்றல், ஆளுமை, சிறப்புப் புற்றி இன்னும் ஆராய இடமிருக்கிறது என்பதையே இவ்வெளியீடு காட்டி நிற்கின்றது. பண்டிதமணி இல்லத்தினரின் முயற்சிகள் திருவினையாக்க வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர். எஸ் சிவலிங்கராஜா**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதந்துரை

பாரதம் வேறுநவ பாரதம் வேறென்றே
ஆரதனை ஆய்ந்தும் அறிந்திடுவார் - பாரதனிற்
பண்டிதரை யாபகர்ந்த பல்லா யிரமவற்றுட்
தண்டேன் பிலிற்றுமிதன் சால்பு.

ச. தங்கமாமயிலோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவபாரதம்

## I.

பொல்லாத நச்சுப் பொய்கை. நாலுபேரும் இறந்து போனார்கள். தருமர் தண்ணீர் குடிக்கிறசமயம். யமதர்மராஜாவின் அநுக்கிரகத்தால் நகுலன் மாத்திரம் உயிர்பெற்றெழுந்தான். இருவரும் இறந்த மூவருக்கும் அந்தியக் கிரியைகளை அந்தப் பொய்கைக்கரையிலே செய்து முடித்தார்கள். திரௌபதி "இனி வனவாசம் போதும்; நாட்டுக்குப் போவோம்" என்று பிடிவாதம் பண்ணினாள். அப்படியே செய்தார்கள். அங்கே இருக்கிறதற்கு ஒரு குடிலும் இவர்களுக்கில்லை. துரியோதன மகாராஜா ஏகசக்கிராதிபதியாய்ப் பொதுநீக்கி அரசு புரிந்து வருகின்றார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கிராமமாக இருகிராமங்கள் சிபார்சு செய்ததன் பேரில் ஒரு கிராமம் மாத்திரம் தருமருக்கு வழங்கப்பட்டது.

## II.

இருவரும் ஒரு மாளிகையில் வசித்து வந்தார்கள். தருமர் பகவத் கைங்கர்யங்களிலும், ஆத்மவிசாரத்திலும் ஈடுபட்டிருந்தார். தருமருக்குக் கீழே என்றுபெயர். நகுலன் கிராமபரிபாலனஞ் செய்து வந்தான். அவனுக்குக் குதிரையேற்றம் பொழுதுபோக்கு. அவனுடைய குதிரைலாயம் ஆயிரம் அழகான பஞ்சகல்யாணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

## III.

பல்லவன் பரம ஏழை; குதிரை ராவுத்தர்களில் ஒருவன். அவனுடைய மனைவி அழகுத் தெய்வம். பல்லவன் இல்லாத சமயம் பார்த்து, அவனைக் காணும் வியாஜமாக நகுலன் அவன் குடிசைக்கு அடிக்கடி போகத் தொடங்கினான். பல்லவன் என்ன செய்வான் பாவம்! தருமருக்கு விண்ணப்பஞ் செய்தான். இது நகுலனுக்குத் தெரிந்தது. அன்று தொடக்கம் நகுலனுக்குத் தருமர் இடறுகட்டை ஆனார்.

ஒருநாள் சாயந்தரம். அயலிலுள்ள கிராமம் சகுனிமாமா உடையது. வெளியிலே உலாவப் போன தருமர் சிறிது தூரம் அந்தக் கிராமத்துக்குள்ளே போய்விட்டார். ஆழ்ந்த யோசனை, பெரிய துக்கம். அவர் ஒன்றையுங் கவனிக்கவில்லை.

ஒருகண் பொட்டையான ஒரு குதிரை. எலும்புந்தோலும். இனி வயசுக்கு இடமில்லை. ஒருகால் முடம், காற்றூத விழுந்துபோம். வளர்த்தவர்கள் கைகழுவிப் போட்டார்கள். போகிற வருகிற விளையாட்டுப் பிள்ளைகளுக்குப் பொறுமை போதித்துக் கொண்டு, தருமருக்கு எதிரிலே அது வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது தான் தருமருக்குத் தாம் நின்ற இடம் தெரிந்தது. அவருடைய கண்களில் கருணைவெள்ளம் பெருகினது. அவர் பிள்ளைகளிடமிருந்து அந்தக் குதிரையைப் பாதுகாத்து, மெள்ள மெள்ள நடத்திக்கொண்டு, நகுலனுடைய லாயத்துக்கு நடு ராத்திரியில் வந்துசேர்ந்தார். நல்லமழை.

நகுலனுக்கு வீணான பழங்கறள், அந்தக் கிழவன் குதிரையை லாயத்திற் சேர்க்க அவன் மறுத்துவிட்டான். தருமர் பிரமித்துப்போனார். தருமர் சொல்ல நகுலன் மறுத்தது மகாபாரதக் கதையிலும் இல்லை. காலம்.

"தம்பீ! நகுலா! உன் குதிரைகளெல்லாம் பஞ்ச கல்யாணிகளா? என்ன! முன் பல முறைகளில் கோவேறு கழுதைகளை - வெறுங்கழுதைகளை - எருமைகளைக் கூட இந்த லாயத்தில் நான் சேர்த்திருக்கின்றேனே. அப்பொழுதெல்லாம் நீ எங்கேயப்பா போயிருந்தாய். இதோ பார்! இது குதிரைப்பா குதிரை.

மழை, மந்தி கொம்பிழக்கும் இருள். மறுக்கிறதற்கு இதுதானோ சமயம்? இனி எங்கே ஒதுங்குவது. எனக்காகச் சேரப்பா! என்னாணைச்சேர்? என்றெல்லாம் தருமர் மன்றாடினார், நகுலன் இளகவில்லை. கொண்டதை விடவில்லை.

"ஏ நகுலா! இந்தக் கிராமம் துரியோதன மகாராஜாவால் எனக்குதவப்பட்டது. இங்கே எனக்குத்தான் அதிகாரம். உனக்கதிகாரம் தந்தது நான். இப்பொழுதே நீ விலகிவிட வேண்டும்". எதிர்பாராத இந்த வார்த்தைகள் தருமபுத்திரரின் வாயிலிருந்து பிறந்தன. தள்ளாத அந்தக்குதிரை உள்ளே தள்ளிவிடப்பட்டது.

அன்றிரவு தருமர் அந்தக் கிராமத்துக்கு ராஜா ஆனார். ஆனால், ஆகாரம் பண்ணவில்லை. நித்திரையும் இல்லை. மனவருத்தத்தோடு சரீர வருத்தமும் ஒன்று பட்டுவிட்டது. டாக்டர் கையில் அவர் தங்கியிருந்தார்.

## IV.

நகுலன் அன்றிரவு தானே அயற் கிராமத்தில் ஆசை மாமா சகுனி - அங்கே போய்ச் சேர்ந்தான். மாமாவுக்குக் கால் தெரியாத புழுகு. அங்கும் - இங்கும் - தலையாலே உழுதார். ஒருமயிரும் இல்லை. முழுவதும் உதிர்ந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னனும் நகுலனும் பழைய சத்துருக்கள். ஒருவரை ஒருவர் காணக் கூசினார்கள். பின்னை, மாமா தனித்தனி இருவரையுங் கண்டு, தலையைக் குனியச் செய்து காதுக்குள் எட்டி ஏதோ பேசி வைத்தார். அந்தக் கிழமை - அதற்கு முந்தின கிழமை - கூட, அந்தப் பக்கத்திலும் இல்லாத மாதிரி மாமா விலகிவிட்டார். ஊர்க்குழப்பம் என்றால், மாமாவுக்குப் பிடிக்காது, மாமா இப்படித்தான். இஃது இங்ஙனமாக.

"எவர்தா முன்னணைந்தவரென் றிதுகாறும் அறியோம்
இருவருமொன் றாயினரென் றேயறையுஞ் சுருதி"
என்ற பாட்டு அன்றைக்கு அசரீரி வாக்காய் எழுந்தது.

கன்னனும் நகுலனும் ஒருவரை நோக்கி ஒருவர் எதிர் சென்றார்கள். இடையிலே நான் - நீ - என்கின்ற விகல்ப வழக்குக் கிடமில்லாமல், ஓரிடத்தில் ஒன்றுபட்டார்கள், மாமாவுக்குச் சத்தியமாக இந்தச் சங்கதி ஒன்றுந் தெரியாது. மாமா பிறகுதான் வந்து சேர்ந்தவர். திரிபுர தகனம் வெகு விமரிசையாய் நடந்தது.

மறுநாட்காலை, பாரிய விண்ணப்பம் பாம்பு முத்திரை ஒட்டித் துரியோதன மகாராஜாவுக்கு நகுலன் அனுப்பி வைத்தான். விண்ணப்பம் பிறகே - கன்னன் முன்னே - கூடிய சீக்கிரத்தில் போய், துரியோதன மகாராஜாவை - யுவராஜா துச்சாதனன் அவர்களை - மற்றுங் காண வேண்டியவர்களைக் கண்டு வைத்து, பேசவேண்டியவர்களைப் பேசி வைத்து, செய்ய வேண்டியவைகளைச் செய்து வைத்தான். ஆகவேண்டியவைகள் அவ்வளவுந் தான். இங்கே நகுலன் அம்மானை விட்டு அகலாமல் இருந்தான்.

V.

துரியோதன மகாராஜா அன்றிரவு அவசரம் அவசரமாகத் தமது "அசம்பிளி"யைக் கூட்டினார். எல்லாரும் சமுகஞ் செய்தார்கள். நகுலனுடைய விண்ணப்பத்திலே தருமர் செய்த கொடுமைகள் விவாதிக்கப்பட்டன.

"தர்மராஜ்யத்தில் பசுவும் புலியும் ஒரு துறையிலே நீர் பருக, நேரில் பார்த்திருக்கின்றேன்" என்று துரோணாச்சாரியர் முணுமுணுத்தார்.

"உத் வேகமுள்ளதும் ஓஓஓ என்ற ஒலிபடைத்ததும், திவ்ய மங்களகரமானதுமான பூரண மதுக் கும்பம் ஆயிரத்துக்கு மத்தியிலே, உம் மென்றிருப்பதும், உதவாததும், குறையானதுமான பதநீர்க் கும்பம் ஒன்றை உள்ளே நுழைக்கலாமா? யோசித்துப் பாருங்கள். அதுவும் இந்தக் காலத்தில். அழகான பஞ்சகல்யாணிகள். ஆயிரம் போர்க்குதிரைகள். அணி அணியாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டிருந்தது அந்த லாயம். அதற்குள்ளே ஒரு கண் பொட்டையாம். ஒன்றுக்கும் உதவாதாம். ஒரு முடக் குதிரையை நுழைப்பதானால் எவ்வளவு அவமானம். இது தகுமா? தருமந்தானா?" என்றான் கன்னன்.

"தருமன் என்ற பெயருக்கு இனி அர்த்தம் இல்லை. உதிட்டிரன் என்று எல்லாரும் பேசுங்கள். தம்பிமாரை இறக்கச் செய்தவன் ஆர்? தானும் உடன் இறந்தானா? இதுதானோ தர்மச் செயல். அருச்சுனன் போகட்டும், சகாதேவனும் சாகட்டும். பாவம்! அந்த வீமன் என்ன குற்றஞ் செய்தவன்? அவனை ஏன் எழுப்பியிருக்கலாகாது" என்றான் யுவராஜா துச்சாதனன்.

பக்கத்திலிருந்தவன் கண்ணில்லாத குருடன்.அவனுக்கு வீமன் உயிர். "வீமா! வீமா! உன்னையுமா தருமன் கைவிட்டான். ஐயையோ! கைவிட்டான்" என்று என்று ஓ என்றலறினான். மேலே பேசவிருந்த பலர் அவ்வளவில் வாயடங்கினர்.

"தருமர் செய்தது முழுதுந் தப்பு; நகுலன் செய்தது முழுதுஞ்சரி. தருமர் கிராமபரிபாலனத்தை விட்டு விலக வேண்டும்; நகுலன் பழையபடி கிராமபரிபாலனத்துக்குரியவன். இது எனது நீதியான தீர்ப்பு" என்றார் துரியோதன மகாராஜா.

VI)

"தருமர் தமையன். அவருக்குப் பூரண அதிகாரம் முன் அளித்திருக்கின்றீர்கள். அவர் கொடுக்க அதிகாரம் பெற்றவன் நகுலன். அதிகாரம் இருக்கட்டும். தமையன் சொல்லுவதைத் தம்பி தட்டலாமா? அதற்குக் தண்டனை இல்லையா? இதுதானோ நீதி" என்று சொல்லிக் கொண்டு வந்தான் விகர்ணன். கன்னன் அவனை மூக்கிலே பிடித்துத் தூக்கி, "உனக்கு இனி விமூக்கன் என்று பெயர்; என்னுடைய பெயரைப் பழுதாக்காதே" என்று சொல்லி வெளியிலே எறிந்து விட்டான்.

பீஷ்மர் எழுந்தார். "நகுலனுக்கு வேண்டுமானால் வேண்டிய நன்மைகளைச் செய்யுங்கள். தருமரைத் தண்டிக்க என்ன குற்றம் இருக்கிறது" என்றார்.

தலையைத் தடவிக் கொண்டு யுவராஜா துச்சாதனன் எழும்பி, "உதிட்டிரனின் பரிபாலன ஊழல் ஒன்றா இரண்டா? தொகா தொகை. இதோ என்னை அனுப்பிவையுங்கள். விசாரணை செய்து விபரங்களுடன் வருகிறேன்" என்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதுரர், "கிராமபரிபாலன உரிமை தருமருக்கு உரியது. குதிரை லாயத்துக்கும் அதிகாரி அவர். அவரால் நியமிக்கப்பட்டவன் நகுலன். தருமருடைய செயல்களில் நகுலன் குறுக்கே போகலாகாது. அவனுக்கு அதிகாரம் இல்லை. தருமர் அநீதி செய்தால் அவன் மகாராஜாவுக்கு மனுப்பண்ணலாம். நகுலன் தனது மனுவிலே, "லாயத்தில் குதிரைகளைச் சேர்க்கும் உரிமை ஆருக்கு உரியது" என்று கேட்கிறான். தருமர் சொந்தக்காரர். உரிமை தருமருக்கு உரியது, என்று மகாராஜா வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆதலால், தருமர் செயலிலே நகுலன் குறுக்காலை போனது தவறு. தருமரை மறுக்க நகுலன் ஆர்? நகுலனுக்கு உந்த வாழ்வு வந்தது ஆராலே? தேவர் என்ன சொல்லுகிறார். "எந் நன்றி" என்ற குறளைப் படித்துப் பாருங்கள். நகுலனுக்கு இனி வரும்பிறப்புக்களிலாவது உய்தி உண்டா? நகுலன் தண்டிக்கப்பட வேண்டியவன். தருமர் தண்டித்திருக்கிறார். தண்டனை கூடியிருந்தால் அதைப்பற்றி மாத்திரம் நகுலன் மனுப்பண்ணியிருக்கலாம். வேண்டுமானால் மகாராஜா அதற்குச் சிறிது பரிகாரஞ் செய்யலாம். லாயத்திலே குதிரைகளைச் சேர்க்கலா மென்பது சட்டம். முன் கழுதைகளை - எருமைகளை - சேர்த்த காலத்திலே இந்த நகுலன் ஒத்துப்பாடியிருக்கின்றான். இப்பொழுது தருமர் பாம்புகள் பல்லிகளை அந்த லாயத்திலே சேர்த்துவிட வில்லை. சட்டப்படி குதிரையைத் தானே சேர்த்திருக்கின்றார். நகுலன் தண்டனைக்குரியவன் இருக்க, தருமரைத் தண்டிப்பது என்ன நியாயம்.

"வழக்குடைய னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன் - வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்றால் அறு."

என்ற பாட்டின் படி நகுலனுக்குத் தான் நட்டம். நமக்கென்ன! நாம் தப்பலாம் என்றெண்ணினீர்கள் போனம். ஒரு வழக்கைத் தீர விசாரிப்பது உங்கள் கடன். தீர விசாரியாது வழக்குத் தீர்த்த பாண்டியன் நெடுஞ் செழியனும், அவன் குலமும், குடிகளும் பட்டபாடு தெரியுமா? துச்சாதனன் தர்ம ராஜ்யத்தில் ஊழல் என்று புதுக்க ஒன்று தொடங்குகிறான். அப்படி ஒரு வழக்கு இங்கே வரவில்லை. உங்கள் போக்கு ஒரு தலைப்பட்டு நடக்கிறது. இது பெரிய அநீதி! அநீதி!! ஏ மகாராஜா! உனது வாழ் நாள் பெருக வேண்டுமானால் நீதியாக நட."

"இறைகடிய னென்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுவி ஒல்லைக் கெடும்." உறை - ஆயுள்.

என்ற திருக்குறளோடு தமது கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லி முடித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தான் துரியோதன மகாராஜ். "ஏ விதுரா! நீ உன் பிறவியைக் காட்டிவிட்டாய். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்பதை அறியாயா? எத்தனை பரம ஏழைகளை அந்தத் தருமன் வதைத்தான். ஆ! பாவம் (அழுகிறான்) அவனுக்கு அஞ்சியல்லவா அந்த ஏழைகள் எனக்கு அறிவிக்கவில்லை. அவர்கள் விட்ட கண்ணீர் சும்மா விடுமா? இப்பொழுது நகுலன் நமக்கு வந்து வாய்த்திருக்கிறான். அவன் அந்த ஏழைகளின் குறை முறைகளை எடுத்துவிட எப்பொழுதும் ஆயத்தம். நகுலன் பரம தயாளு, பெரிய தியாகி, ஏழைகளுக்கு இரங்கியல்லவா தனது பதவியை உதறித்தள்ளி விட்டான். எவ்வளவு பெரியவன். "போயின்றில்" நின்றால் செங்கோல் நடக்குமா? எந்த வழியாயாவது, தருமனின் தவறுகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது நீதி. இந்தச் சமயத்தை இழந்தால் இனி எந்தச் சமயத்திலே, எந்த மநுவந்தரத்திலே தருமனைத் தண்டிக்க முடியும். அந்த மூதேவி ஏழைகள் அவனுக் கெதிராக ஒன்று சொல்ல எப்பொழுதாவது வருவார்களா? பயங்காளிகள்! பயங்காளிகள்!

நமது மாமா நெடுங்காலம் இருக்க வேண்டும். மாமாவுக்குக் குறித்த வேலைகளை இனி மாமா செய்ய வேண்டாம். பாவம்! மாமா சும்மா இருந்து வேதனம் பெறட்டும். மாமா எவ்வளவு தூரம் - காலம் - அலைக்கழிந்தவர். கன்னனை மறக்க முடியாது. (பிறப்பு - வளர்ப்பு - தேசம் - சாதி - குணம் - குறி - தெரியாவிட்டாலும்) அவன் நல்லாயிருக்க வேண்டும். தம்பி துச்சாதனன் தான் தம்பி, அவன் உதவிதான் உதவி. இவர்கள் இல்லாமல் இருந்தால் தருமனை என்ன செய்ய முடியும்! அடே தம்பீ துச்சாதனா! ஆ ................ ஆ"

"அண்ணா ஆ! அண்ணா ஆ ஆ!"

"அடே! இந்த விதுரன் சொல்லுகிறான். தருமன் குற்றம் அற்றவனாம். ஏன் பாட்டாவும் அப்படித்தான். தலை ஆட்டுகிறார். இதோ! இந்தக்ஷணம்! நகுலனைக் கண்டு - தருமனை விளங்கி - தருமன் தவறுகளைக் கூட்டியள்ளிக் கட்டிவா - போ. வாஆ - போ."

"ஆ ஹா ஆ ... போறேனிதோ போறேனிதோ" துச்சாதனன் போய் விட்டான்.

## VII.

மறுநாட்காலை. தருமர் மாளிகையில் ஒரு அறை. "உதிஷ்டிரரே! இந்தக் கிராம பரிபாலன ஊழல்களைப் பற்றி, ஒரு விசாரணை நடாத்தும்படி நான் வந்திருக்கிறேன். மகாராஜாவின் கட்டளை" என்றான் துச்சாதனன்.

"நீ எங்கள் ஜன்ம சத்துரு. என் தம்பிமாரைக் கொல்லுகிறதற்கு இளமை தொடக்கம் நீ எத்தனை சூழ்ச்சி செய்திருக்கின்றாய். இப்படிப்பட்ட நீதானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை விசாரணை செய்யத்தக்கவன். அந்த பீஷ்மர் விதுரர் முதலிய பெரியோர்கள் இறந்தா போனார்கள். அவர்களுக்கு விசாரணை செய்யத் தகுதி இல்லைப் போலும்" என்று வெகு கண்டிப்பாகத் தருமர் சொல்லிவிட்டார்.

துச்சாதனனுக்கு அழுகை யொன்று வராத துக்கம். நகுலனை அழைத்துக் கொண்டு மாமா வீட்டுக்குப் போனான். வழியில் வந்தாள் மந்தரை. "யுவராஜாவைத் தரிசனஞ் செய்யக் காத்திருக்கின்றேன்" என்றாள் அவள்.

"நீ யார்?" என்று துச்சாதனன் கேட்டான்.
"தெரியாதா? நான் மந்தரை"
"நீ இராமாயணத்தில் மந்தரையல்லவா"
"ஆம் ஐயா!"
"ஏன் இங்கே வந்தாய்?"

"ஐயா! உற்றுக் கேளுங்கள். நான் இராமாயணத்திலிருக்கும் போது, அந்தக் கொடியவன் ராமன் காட்டிலிருந்து நாட்டுக்கு வந்தான். அவள் - சீதை - பொல்லாதவள். அவள் கண்ணுக்கு நான் ஆகாது. அன்றைக்கே நான் பாரதத்துக்கு வந்துவிட்டேன். பாரதத்தில் பாஞ்சாலி நல்லவள். அவளுக்கு ஏவல் செய்து காலங் கழிக்கலாமென்று எண்ணி அவளுடன் இருந்தேன்.

"அப்பால் என்ன நடந்தது? சொல்லு."

"ஐயா, நான் கிழவி. மெல்ல மெல்லத்தான் சொல்லுவேன். தருமன் இருக்கிறான். படு பாவி! அவனுக்கு அந்தப் பெயர் வீண் பெயர்."

"அப்படிச் சொல்லு."

"பொறுங்கள், தருமனுக்கு இராப்பன்னிரண்டு மணி வரை கை கால் பிடிக்க வேண்டும். ஒரு நாட் பார்த்து நீ கிழவி, போய்ப்படு, என்று சொல்லான். அவன் நித்திரையை நான் எதிர் பார்த்திருக்க வேண்டும். இது போகட்டும். கைகேசியம்மா இராமாயணத்தில் எனக்குத் தந்தது ஒரு முத்துமாலை. அதை இந்தத் தருமன் கவர்ந்து விட்டான். அவ்வளவில் விட்டால் போதாதா. எனது காலில் எனக்கு ஒரு உதையும் கிடைத்தது? முதுகு கூனிவிட்டது பாருங்கள். இனி, எப்படி வெளியிலே போவது. எல்லாரும் கூனி! கூனி! என்று பல்லைக் காட்டுகிறார்கள். நான் மாளவியாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவசியம் காயகல்ப சிகிச்சை செய்ய வேண்டும். எனக்கு அது சித்திக்கும். எனக்கும் மாளவியாவுக்கும் தோற்றத்தில் ஒற்றுமை உண்டு என்று சொல்லுகிறார்கள். கையிலை மடியிலை இல்லை. தருமனை என்ன ஐயா செய்வது!" என்று இராமாயணத்திலிருந்து மகா பாரதத்தில் இறங்கினாள் மந்தரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச்சாதனனுக்குப் பெரிய புழுகு. நகுலனைப் பல முறை முதுகிலே தட்டிக் கொடுத்தான். மூவரும் மாமாவின் மாளிகையை அடைந்தார்கள். அங்கே கன்னனும் இருந்தான். மாமாவிலே மந்தரைக்கு ஒரு காதலும். அதை அவள் இங்கே காட்டவில்லை. நகுலன் மாமா வீட்டில் வழக்கம்போலிருக்க, மற்ற நால்வரும் மகாராஜா விடம் போய், அவரைச் சந்தித்தார்கள். இப்படியான சந்திப்பு எந்தக் காலத்திலும் வராது. மிகவும் அருமை. கலி முற்றுகிற காலத்திலே எப்பொழுதாவது வந்து சந்திக்கும். இச்சந்திப்பின் விசேஷத்தைப் பஞ்சவ பாந்தவ்ய நாடகத்திற் காண்க.

இந்தப் பஞ்சவ பாந்தவ்ய விசேஷத்தினாலே மகாராஜாவின் பழைய தீர்மானமே ஊர்ஜிதம் செய்யப்பட்டு, அதனோடு தருமர் பரம ஏழைகளை ஹிம்சித்தார் என்று ஒரு குற்றமும் பிரசித்தம் செய்யப் பட்டது.

## VIII.

தருமர் அந்தக் குதிரையையும் அவிழ்த்துக் கொண்டு, போகிறதற்கு லாயத்துக்குப்போனார். அந்தக் குதிரையை வைத்திருந்தால் தான் அநேக வேலைக்காரர்களைத் துரியோதன மகாராஜா அநுமதிப்பார். "இந்தக் குதிரை இங்கே தானே நிற்கட்டும். நான் இதை வஞ்சிக்கவில்லை" என்று நகுலன் தருமரைக் கேட்டுக் கொண்டான். தருமர் வளர்த்து வந்தது ஒரு பூனைக்குட்டி. அதைத் தூக்கிக் கொண்டு தருமர் புறப்பட்டார். பாஞ்சாலி வழி மறித்துக் கதறினாள். "பத்தாவின் வழியில் நிற்றல் பதிவிரதா தர்மம். நகுலன் சொல்வழி நட" என்று உபதேசஞ் செய்துவிட்டுத் தெருவிலே தருமர் சென்றார்.

நகுலன் தன் நண்பர்களோடு அரண்மனையில் பிரவேசித்தான். நகுல ராஜாவே கிராம பரிபாலன பூரண அதிகாரி என்றெழுதிய விளம்பரங்கள் எங்கும் பரவின. இராச்சிய பரிபாலனம் நடந்தது. அந்தக் குதிரைக்கும் நல்ல காலம். ஆடல் பாடல்களிலும், சகுனி மாமா வகையறாக்களைத் தனது (தருமரது) மாளிகையில் வரவேற்று "ரீப்பாட்டிகள்" வைப்பதிலும் நகுலன் காலங் கழித்தான். தருமரைப் பற்றி ஒரு பிராணி - ஒரு வார்த்தை - மருந்துக்கும் இல்லை.

ஒவ்வொரு தெருவாக எல்லாத் தெருக்களிலும் தருமர் அலைந்தார். கால் வலிக்க நடந்தார். பூனைக்குட்டிக்குப் பசி. அது அழுதது. கண்டவர்கள் எல்லாருங் கண்ணீர் வடித்தார்கள். அந்த வகையறாக்களுக்குப் பயந்து, பாவம்! எவரொருவரும் தமது வீட்டில் வரவேற்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IX.

ஒரு முழுமகன். இடைய வகுப்பைச் சேர்ந்தவன். இனி, நகுலனுக்கு மந்தை மேய்க்கின்றவன். நல்லவன். நடுமூக்கிலே கோபக்காரன். அவன், தன்கீழ் மந்தை மேய்ப்பவர்கள் சிலரை ஏசி உதைக்கிற மாதிரி நின்றான்.

தெருவிலே போன தருமர் அவனைக் கூப்பிட்டார். அவனுடைய பெண்சாதி, "இஞ்சை தங்காதை தங்காதை போப்பா போ, கூப்பிடுறாங்கள்" என்றாள்.

"அலுவலெண்டால் மந்தை மேய்ச்சிறடத்துக்கு வந்து காண், தெருவிலை திரியிற உன்னட்டை வந்தா மூன்று மனிசங்கள் மதிப்பாங்களா" என்றான் அந்த இடையன்.

## X.

நடு ராத்திரி உலூகர் தருமருடைய புரோகிதர். அவருடைய வீட்டுக்குத் தருமர் போய், "சுவாமி, இந்த உலகத்தைப் பார்க்கும் போது நகுலன் மிக நல்லவன். அவன் என்னைக் கெடுக்க வேணுமென்று கெடுத்தவனல்ல. தன் நயத்துக்குப் பிறருடைய தூண்டுதலால், ஏதோ செய்து போட்டான். அவனை நான் மன்னிக்கிறேன். அவன் என்னைக் குறித்து மனசுக்குள் வருத்தப்படுவான். அது எனக்குத் தெரியும். அது நிற்க, எனக்கு அயலிலே போய் அந்தக் கொடியவர்களின் கிராமங்களில் ஒதுங்க விருப்பம் இல்லை. இந்தக் கிராமத்திலே தானே தங்கள் சிஷ்ய வர்க்கங்களுள் யாருக்காவது ஒரு சிபார்சுக் கடிதம் கொடுப்பீர்களானால், அங்கே போய் ஒரு கோடியிலே ஒதுங்கலாஞ் சாமி" என்றார்.

உலூகமாமுனிவர், "அதொன்றும் முடியாது பாரும். எழுத்துக் கிறுக்கு வைக்க முடியாது. பசித்தால் சாப்பிட்டுப் போட்டுப் போம். இனி நான் ஸ்ரீ நகுலரைச் சார்ந்து நடக்கணும்."

தருமருக்கு முகத்திலே ஒரு மாறுதலும் உண்டாகவில்லை. வழக்கம் போல நமஸ்காரம் பண்ணிவிட்டு வெளியே போனார்.

## XI

பீம விஜய தர்ம சத்திரம். இது தம்பிமார்களின் ஞாபகத்துக்காகத் தருமரால் கட்டுவிக்கப்பட்டது. தம்முடைய சொத்தையும் பீம விஜயர்களின் சொத்தையும் இந்தச் சத்திரத்துக்கே தர்மசாதனஞ்செய்து வைத்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகாதேவனின் சொத்து இதிற் சேரவில்லை. ஆகையால், அவன் பெயர் வரவில்லை. இந்தச் சத்திரத்துக்கு ஒரு குறையுங் கிடையாது. இப்போது நகுலனது மேற்பார்வையில் நடக்கிறது. அங்கே ஏழைகளுக்கு மூன்று நேரமும் போஜனம் கிடைக்கும்.

இதிலிருக்கும் கணக்குப்பிள்ளை தருமரால் நியோகிக்கப்பட்டவர். இவர் இளமையில் கொஞ்சம் அட்டாதுட்டிக்காரன். பல இடங்களில் வேலை பார்த்தவர். பரோபகாரி. பலருக்கு நண்பர். அருவடைய கை விரிந்த கை. கொஞ்சக் காலம் வேலையின்றி அலை அலை யென்று அலைந்து போனார். அந்தக் காலத்திலே தான் தருமரை வந்து சேர்ந்தவர். சகுனி மாமா நைஷ்டிகப்பிரமச்சாரி. அவருக்கு மகளில்லை. மகள் முறையான ஒரு பெண்ணை இப்பொழுது சிறிது காலத்துக்கு முன்பு தான் கணக்குப்பிள்ளை திருமணம் புரிந்தார். மணத்துக்குப் பிறகு கணக்குப்பிள்ளை கொஞ்சம் மாறி விட்டார். தாம் இராசவம்சத்தைக் கிட்டிவிட்டதாகக் கணக்குப்பிள்ளைக்குக் கனவு. இதற்கெல்லாம் மாமாத்தான் காரணம். மாமாவைப் பற்றி ஆர் என்ன சொன்னாலும், கணக்குப்பிள்ளைக்கு மாமாவில் பெரிய மதிப்பு. மாமா தப்பித்தவறி வந்த ஒரு அவதாரம் என்று கூட எண்ணம். இப்பொழுது கணக்குப்பிள்ளைக்கு மாமா இட்டதுதான் சட்டம். மாமா கீறின கீற்றிலே கணக்குப் பிள்ளை நிற்பார். தமது பாலிய நண்பர்களைக் கூட உதறித்தள்ளிப்போட்டார். பரோபகாரத்தை என்னமாதிரி மறந்தாரோ! இந்தநாட்களில் கணக்குப்பிள்ளை, கணக்குப்பிள்ளை அல்ல, என்ற கதை வந்துவிட்டது. ஆனால். கதைவந்த அளவு கணக்குப்பிள்ளை கெட்டவர் அல்ல.

தருமர் தமது கணக்குப்பிள்ளையிடம் போனார். வழக்கமான தடபுடல், வரவேற்பு, உபசாரம் ஒன்றும் நடக்கவில்லை. அங்கே ஒரு அறையில் தருமர் போயிருந்தார். பூனைக்குட்டி வாலாலே அவருடைய கால்களைத் தீண்டி வளைந்து வளைந்து வந்தது.

கணக்குப்பிள்ளைக்கு அன்றிரவு நித்திரை இல்லை. அடுத்த நாளும் இல்லை. பிறகும் இல்லை. மாமா தொந்தரவு போடுகின்றார். தருமரை எப்படிச் சத்திரத்தில் வைத்திருப்பது? நகுலனுக்கு முறையிட்டார். அவன் மௌனமாயிருந்தான். மகாராஜாவும் கவனிக்கவில்லை. கணக்குப்பிள்ளை பாவம்! மாமாவைத்தானே சரணம் அடைந்தார். மாமா கன்னனைக் கிள்ளிவிட்டார். கன்னன் மகாராஜாவை அழைத்துக் கொண்டு நகுலனிடம் வந்து சேர்ந்தான். மகாராஜாவும் நகுலனும் சம்பாஷித்தார்கள். சம்பாஷணையின் பயனாக ஒரு கடிதம் கணக்குப்பிள்ளைக்கு அனுப்பப்பட்டது. கணக்குப்பிள்ளை அக்கடிதத்தைத் தருமருக்குச் சமர்ப்பித்தார். “காசு 18 சதம் பெற்றுக் கொண்டு 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி 35 நிமிஷத்துக்குள் சத்திரத்தை விட்டு வெளியேறி விடவேண்டும்." என்று எழுதியிருந்தது.

தருமருக்கு வழக்கத்திலும் பார்க்க முகம் மலர்ந்தது. இது ஈசுவரனுடைய இறுதிப் பரீக்ஷை என்று எண்ணினார். "கணக்குப்பிள்ளைவாள் தாங்கள் என்னால் வெகு கஷ்டப்பட்டு விட்டீர்கள் போலத் தோன்கிறது. முன்னமே தெரிவித்திருந்தால் நான் தங்களுக்கு ஒரு கஷ்டமும் வைத்திருக்கமாட்டேனே" என்றார். கணக்குப்பிள்ளைக்குப் பேச நா எழவில்லை. கண்கள் தாரைவார்த்துப் பிரியாவிடை செய்தன. மனசாரக் கணக்குப்பிள்ளை நல்லவர்.

## XII

1. "கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டிய ளப்பதோர் கோல்"

2. "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்"

3. கொடுப்பது விலக்கு கொடி யோய் உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி ஒழி யுங்காண்"

4. "கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்"

## XIII.

நடுக்காடு. நச்சுப் பொய்கைக்கரையிலே ஒரு அடர்ந்த ஆலவிருக்ஷ நிழலிலே தருமர் ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தியானித்துக் கொண்டிருக்கிறார். பூனைக்குட்டி ஆலமரத்திலே எலி இருக்குமோ என்று அண்ணார்ந்து பார்க்கின்றது.

பகவான் பிரசன்னமாய்த் தமது விசுவருபத்தைக் காட்டியருளினார். ஈரெழு பதினாலு உலகங்களையும் பகவானது பாதரோமங்களுள்ளே, ஒரு சிறிய ரோமத்துவாரத்துக்குள் தருமர் தரிசித்தார். மற்றொரு உரோமத் துவாரத்துக்குள்ளே மோக்ஷ உலகங்கள் நரக உலகங்கள் தோன்றின. மோக்ஷ உலகங்களுக்கு அதிபதியாய் விதுரர் அங்கே எழுந்தருளியிருந்தார். தருமர் அவரை விழுந்து விழுந்து நமஸ்காரஞ் செய்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றார். அவரோடு வீம விஜய சகாதேவர்கள் இருப்பதையுங் கண்டார். அப்பால் நரக லோகங்களை ஒரு முறை திரும்பிப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே யமகிங்கரர்கள் பதினாயிரங் குடங் கள்ளை ஒரு இருப்புக் கொப்பறையில் ஊற்றி, வடவாமுகாக்கினியைக் கொளுத்தி, கொதிக்கக் கொதிக்க அள்ளி கன்னனுடைய வாயிலே ஊற்றுகின்றார்கள்! "அடேகன்னா! குதிரைகளுக்கு நீ சொன்ன உவமானத்தை நினைத்துப்பார். கள்ளுக்குடமா? பதநீர்க்குடமா சிறந்தது? சொல்லு! சொல்லு! என்று ஒரு கிங்கரன் அவன் வாயை வாளாலே துளைத்தான். "இந்த வள்ளலுக்குமா இப்படி வந்தது" என்று சொல்லிக்கொண்டு தருமர் மற்றொரு புறந் திரும்பினார்.

வட்ட வடிவமான ஒரு சிறிய பளிங்கு மண்டபம். அது சுழன்று கொண்டிருக்கிறது. அம் மண்டபத்தைச் சூழப்பழுக்கக்காய்ச்சிய இருப்புத்திண்ணை. அது அழன்று அழன்று நெருப்பைக் கொப்பளிக்கின்றது. ஒருவர் திகம்பரர். தலை கீழே கால் மேலே. அப்பளிங்கு மண்டபத்தைச் சுற்றிச் சுற்றி, அந்த நெருப்புத் திண்ணையிலே தெறித்துத் தெறித்து ஓடிக்கொண்டிருக்கின்றார். பாவம்! துடி துடிக்கின்றார். பதைபதைக்கின்றார். அந்த ஆள் ஆர்? நமது மாமா. அந்தப் பளிங்கு மண்டபத்துக்குள்ளே அழகான கன்னிகை மணிகள் அநேகர் வம்பளந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களெல்லாம் மாமாவின் பூர்வாசிரமத்தில் மாமாவுக்கு மணம்பேசி மாமாவை நம்பியிருந்து மாமாவில் ஏமாந்தவர்கள். அப்பால் தருமருக்குச் சகிக்க முடியவில்லை. கண்ணை மூடினார். ஞான உதயம்மானது.

## XIV.

பகவான் சிறு குழந்தையாய் ஒரு ஆலமிலையில் எழுந்தருளிக் கீதா உபதேசஞ் செய்தருளினார். பூனைக்குட்டியும் கேட்டுக்கொண்டிருந்தது. தேவர்கள் மந்தாரம் முதலிய புஷ்பங்கள் வருஷித்தார்கள். திவ்விய தேசோமயமான ஒரு தேவ விமானம் தருமருக்கு எதிரிலே இறங்கி, நிலத்திலே தீண்டாமல் அந்தரத்தில் நின்றது. அருச்சுனர் அந்த விமானத்துக்குள்ளே எழுந்து நின்று, இரண்டு கைகளையும் நீட்டி, அவ்விமானத்தில் எழுந்தருளும்படி தருமரை வேண்டினார். தருமர் தமது பூனைக்குட்டியை அருச்சுனருடைய ஒரு கையிலே கொடுத்து, மற்றக் கையிலே தாம் பிடித்துக்கொண்டு, அதில் இவர்ந்து, ரத்தின சிம்மாசனம் ஒன்றில் வீற்றிருந்தருளினார். அருச்சுனர் தருமரை விழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்கரித்து, அவருடைய பாதங்களைச் சிரமேற் சூட்டினார். தருமர் அருச்சுனரைக் கட்டித் தழுவி, எழுந்திருக்கச் செய்து, பகவானருளிய கீதோபதேசத்தைச் சுருக்கி ஒரு செய்யுள் வடிவில் உபதேசித்தருளினார்.

அந்தச் செய்யுள் இது :-

"மாயையென் றொருத்தி தன்பால்
மனமெனும் மைந்தன் தோன்றித்
தூயநல் லறிவன் தன்னைத்
தோற்றமின் றாக்கிவைத்தான்
தாயொடு தந்தை மக்கள்
தாரமென் றிவர்பால் வைத்த
நேயமும் இவன்ற னாலே
நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி கண்டாய்"

(குறிப்பு: இனிச் சாந்தி பருவத்தில் பரமண்டல விளக்கம் சீவனைப்போட்டு வைத்தால் வருகிற ஆண்டுமடலிலே நடக்கும். இப்படியே நவராமாயணம் அல்லது புது ராமாயணம் என்றும் வந்தாலென்ன? இந்த உலகமே வெறும் கற்பனையல்லவா? சாந்தி! சாந்தி!!)

**நன்றி: ஈழகேசரி ஆண்டு மலர் 1938**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அளித்த முகவுரை

# மறைகின்ற பழைய நினைவு

தென்மராட்சியிலே மட்டுவில் வடக்குப் பல விசேடங்களோடு கூடியது. அவ்விசேடங்களுள் சனநாயகமான விசேடங்கள் இரண்டு. அவ்விசேடங்களுள் ஒன்று பன்றித்தலைச்சி என வழங்கும் கண்ணகியம்மை கோயில். மற்றையது "லோச்" செல்லப்பா என வழங்கும் திரு.நா.செல்லப்பா அவர்களின் நுண்ணிய விவேகசாமர்த்தியம்.

தமது தந்தையாருக்குப்பின் மட்டுவிலுக்கு மகா சிறப்பைத் தந்தவர் மகாலிங்கசிவம். அவர் செல்லப்பா அவர்களைப்பற்றிப் பேசும்போது அற்புதமான விவேகம் என்ற தொடரை அடிக்கடி உபயோகித்து வாயூறுவதுண்டு.

திரு. செல்லப்பா அவர்களுக்கு ஆங்கிலத்தில் ஒரு அட்சரமுந் தெரியாது. தமிழ்ப்படிப்பு ஐந்தாம் வகுப்புப் படிப்புத் தான். ஆனால் அவருடைய விவேகம் எந்தத் துறையிலுந் தங்குதடையின்றிச் சென்று கொண்டிருக்கும். கோட்டிலே வழக்குகளில் வெற்றி பெறுவதிலேதான் அவருக்குப் பெரிய இரசனை. பெரியதொரு கோட்டுப்புலி அவர். ஊரப்புக்காத்து என்று அவரைச் சொல்லுவதுண்டு. அவர்காலத்திலே யாழ்ப்பாணத்திலிருந்த வழக்கறிஞர்களில் அவரைப் பாராட்டாதாரில்லை. "சீவில் லோ" என்றால் அவருக்குத் தலைகீழ்ப் பாடம். வெகு வெகு தூரத்திலிருந்தும் அவருடைய உதவியைப்பெற வருவார்கள். அவருடைய விவேகம் சட்டத் துறையிலேயே சென்று கொண்டிருந்தது. அந்த விவேகத்தை மற்றொரு துறையிலுந் திருப்பிய பெருமை சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் மூலபுருடரான திரு. சு. இராசரத்தினம் அத்துவக்காத்து அவர்களுக்குரியது.

1924ஆம் ஆண்டு தொடக்கம் தென்மராட்சிப் பகுதியில் சைவ வித்தியாசாலைகள் தாபிப்பதற்குத் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் பெரியதொரு சேனாதிபதியாயமைந்தார் திரு. நா. செல்லப்பா அவர்கள். கண்மூடி விழிக்கமுன் பெரிய காரியங்களை வெகு சிறப்பாகச் செய்தேதீருவார் திரு. நா. செல்லப்பா. தென்மராட்சியின் முடிசூடா மன்னராய் நூற்றுக் கணக்கான கிறீஸ்த பாடசாலைகளின் அதிபராய் விளங்கியவர் திரு. சின்னத்தம்பிப் போதகர். அவருடைய மாடமாளிகை கூடகோபுரங்களைத் தவிடுபொடி செய்வதில் வலக்கரமாயுதவியவர் திரு.செல்லப்பா. சந்திரமௌலீச வித்தியாசாலை, சாந்தநாயகி வித்தியாசாலைகள் தோன்றுவதற்கு மூலகாரணர் திரு. செல்லப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரமௌலீச வித்தியாசாலையில் ஒரு காவிய வகுப்பு நடத்துவதற்கு முயற்சிசெய்து, 1925ஆம் ஆண்டில் வெற்றிகண்டவர் திரு.செல்லப்பா. அவ்வகுப்பை இராக்காலங்களில் அவர் கேள்விப்படி நான் நடத்தி வந்தேன். அவ்வகுப்பிற் படித்தவர்களிற் பெரும்பாலார் உபாத்தியாயர்களாய் நல்ல நிலையிலிருக்கின்றார்கள். அக்காலத்தில் மதுரைப் பண்டித பரீட்சையில் நான் சித்தியெய்தினேன். அதற்காக வண்ணை நாவலர் பாடசாலையில் ஒரு தங்கப்பதக்கம் எனக்கு அளிக்கப்பட்டது. அதனைக் கண்ணுற்ற திரு. செல்லப்பா அவர்கள் சந்திரமௌலீச வித்தியாசாலையில் திரு.மகாலிங்கசிவத்தின் தலைமையில் ஒரு கூட்டங்கூட்டித் தங்கப்பதக்கத்துக்கு ஏற்ற தங்கச்சங்கிலி ஒன்று எனக்குபகரித்துச் சன்மானித்தார்கள்.அக்கூட்டத்தில் எனக்குச் சன்மானஞ் செய்ததை என் அருமைத் தகப்பனாருங் கண்டுகளித்தார்கள். அதை என்றைக்கு நினைத்தாலும் எனக்கு உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை உருகும்.

1926ஆம் ஆண்டு சந்திரமௌலீச வித்தியாசாலையில் ஒரு பெருவிழா. சேர்.பொன். இராமநாதன் துரைக்கு வெகு சிறப்பானதொரு வரவேற்பு. விழாவின் கோலாகலம் சொல்லுந்தரமன்று. சட்டசபைப் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்கள், பாரிய பிரமுகர்கள் அத்தனைபேருஞ் சமுகமளித்தனர். சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் முதனாளே வந்து விட்டார்கள். வரவேற்பு உபநியாசம் நிகழ்த்தியவர் மகாலிங்கசிவம். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிவதாயிருந்தது. அன்று அவர் நிகழ்த்திய பிரசங்கம் சேர். இராமநாதன்துரை தர்மபத்தினியாரோடு எளிவந்த அருமை பெருமையை மகாலிங்கசிவம் எடுத்து வர்ணித்தபோது, வருணனை வெள்ளத்துள் முழுகி விளையாடத் தொடங்கி விட்டார் பொன். இராமநாதன்துரை. இடையிற் சிறிதுநேரம் மகாலிங்கசிவத்தை நிறுத்தி விட்டுச் சிவத்தின் புலமை விசித்திரத்தை வாயாரப் புகழ்ந்து வருணிக்கத் தொடங்கிவிட்டார் முதுபெருங் கிழவனார் இராமநாதன்துரை. அன்று நடந்த அந்தக்கூட்டத்தின் சிறப்பை இன்று வரை நான் கண்டதில்லை. அக்கூட்டத்தை அழகுபெற நடத்திய பெருமை திரு.நா.செல்லப்பா அவர்களுக்கு உரியதே.

அக்கூட்டத்திற் காவிய வகுப்பில் தேறிய மாணவர்களுக்குப் பொன். இராமநாதன்துரையின் பொற்கரங்களாற் பரிசில்களும் அளிக்கப்பட்டன. திரு.ச.கோபாலபிள்ளை என்ற மாணவர் முதற்பரிசு பெற்றது இன்றும் ஞாபகமாயிருக்கிறது.

காவிய வகுப்பு மாணவர்கள் கண்ணகி அம்மை கோயிலில் விசேட காலங்களிலும் விழாக்காலங்களிலும் கண்ணகி தோத்திரம் படிக்கவேண்டு மென்பது திரு.செல்லப்பா அவர்களின் நிபந்தனை. அதன்பொருட்டு அப்பொழுது இயற்றப்பட்டது கண்ணகியம்மை தோத்திரம். இத்தோத்திரம் பற்றிய நினைவு, கனவாய்ப் பழங்கதையாய்ப் போனது. நாற்பது வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மட்டுவில்

# கண்ணகி அம்மை தோத்திரம்

## காப்பு

செந்தமிழிற் கண்ணகியின் தெய்வத் திறம்பாட
மைந்தர்காள்! வம்மின்! மதிகிளர - முந்திப்போய்
ஆலமர நீழலமர் ஐங்கரத்தெங் கோமானைச்
சாலத் தொழுதெழுவோந் தான்.

காவிரிப்பூம் பட்டினத்துக் கண்மணியே
கனத்தவ ணிகர்குலப் பெண்மணியே 1

பெருத்தபெ ருங்குடியர் குலக் கொழுந்தே
பேசுமா நாய்கன்றரு தவக் கொழுந்தே 2

மாசாத்து வான்மகிழும் மருமகளே
மனமிரங் காயெங்கள் திருமகளே 3

கோவலனை மணந்தஒரு குலக்கொடியே
கோதில்வள மேவுமெங்கள் தலக்கொடியே 4

கற்புக் களஞ்சியமே கண்ணகியே
கல்லா மனமுருகப் பண்ணுவையே 5

பொற்புக் கிளிமொழியே பொற்பாவாய்
பூம்புகார் வணிகர்குலப் பூங்கோதாய் 6

மதுரைப்பெ ருவழியுங் கொண்டனையே
மதுரத்த மிழ்மொழியுங் கண்டனையே 7

கவுந்தி அடிகளொடு சென்றனையே
கடிய சுரம் வெதுப்ப நின்றனையே 8

கானக்குறக் கொடியின் கூத்து
கண்ணுக்கினிது கொல்நீ பார்த்து 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரியென் பாளுனது நட்பாட்டி
மாதுயரந் தீர்த்தருள்வாய் பெருமாட்டி 10

ஐயையென் பாளுனது அடித்தொண்டி
ஆரஞர்கள் யாவையுமே நீகண்டி 11

பொற்சிலம்பு நீகரத்திற் கொடுத்தனையே
பொல்லா வினைகளெல்லாந் தடுத்தனையே 12

வெண்ணெயுண்ட கள்வனுக்கோர் குரவை
வேண்டி யெடுத்தாரே ஆயப்பரவை 13

கோவலனிறந்த செய்தி கேட்டனையே
கொடியதுய ரெய்தியுளம் வாட்டினையே 14

காய்கதிரும் நேரிலொன்று கூறினனே
கற்பினுக்கு நேரிலென்று தேறினனே 15

மாமதுரை வீதிதனிற் சென்றனையே
மாதுயர மெய்தியுளங் கன்றினையே 16

கோவல னுயிர்த் தெழும்பக் கண்டனையே
கொழுநன்பிரி வாற்றுயரங் கொண்டனையே 17

தென்றமிழ்க் காவலனுங் கண்டானே
தேவியுடன் றன்னுயிரை விண்டானே 18

கோபங் கொதித்தழன்று மீறினதே
கொங்கை திருகியெழுந் தேறினதே 19

மாமதுரை யெங்குமெரி மூட்டினையே
மாபா தகரையெல்லாம் வீட்டினையே 20

தானொருபொய் கூறினனே தட்டான்
தமிழகமெ லாமழிந்து கெட்டான் 21

ஈரெழுநா ளெங்குந் திரிந் தலைந்தாயே
இமயவர்பூ மாலையினை மிலைந்தாயே 22

ஈரெழுநா ளெல்லைவரும் போது
ஏகினைசெங் குன்றுமலை மீது 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் விமானமத னூடு
சென்றனையே நின் கொழுநனோடு 24

சேரகுலம் வாழவைத்த தேவி
சிறியேனைக் காத்தருள் யான்பாவி 25

சிலப்பதிகார மென்னுந் தேனே
தேவருண் டாலமிர்த மேனே 26

முத்தமிழ் துளும்பி வழிந்தோடும்
முன்னு தொறுளமுருகி நாடும் 27

அரசியல் பிழைத்தோருக் கறங்கூற்றம்
அருவினை யுருத்துவந்திடு சீற்றம் 28

உரைசால் பத்தினிக் குயரேற்றம்
உரைக்குமே இளங்கோ வடிமாற்றம் 29

செந்தமிழ்ச் சிலப்பதி காரம்
தேவியுன்றன் மார்பிற் சந்த்ரஹாரம் 30

கடல்சூ ழிலங்கையாண்ட கயவாகு
காணவுனை வைத்தானெம்மைத் தயவாகு 31

## வேறு

கண்ணகித் தாயே கனங்குழையே
கடைக் கணிப்பாய்கரு ணாகரியே 32

தண்ணருட் கடலே தனிக்குயிலே
சரணடைந் தேனுனைப் பெடைமயிலே 33

மானே தேனே மாங்குயிலே
மழலைச் சொற்றா தீங்குயிலே 34

வானோ ரமுதே மடமயிலே
வா வா நடனமிடுமயிலே 35

அன்பே அனமே ஆருயிரே
அருளே பொழிவாய் பெருவாழ்வே 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பே தொடரா துனதருளே
தொடரத் தடிவாய் துயர்மருளே 37

கதலிப் பழமே மாங்கனியே
கனிந்த வருகைத் தீங்கனியே 38

வழியில் நிழற்றும் பூந்தருவே
வந்தனைக் குரியகற் பகதருவே 39

பொழிலே தடமே பூம்போதே
பொன்னங் கொம்பே புகலிடமே 40

மலரே மணமே யதனூடே
மருவுந் தென்றமிழ் மாருதமே 41

உலகே உயிரே உயிர்க்குயிரே
ஒளியே ஒளிக்குள் ஒளிரொளியே 42

அள்ளிக் கொள்ளு மாரமுதே
அதனுளிருக்கு மருஞ் சுவையே 43

தெள்ளத் தெளிக்கு மாரறிவே
திருந்தும தன்பாலுறு பயனே 44

கரும்பே கண்டே சருக்கரையே
கலந்தொன் றாக்கிய தீஞ்சுவையே 45

பாலே தேனே பாயசமே
பருகற் குரியதோ ராரமுதே 46

பன்றித் தலைச்சி யெனும் பெயரே
படைத்தா யெமக்கோர் பெரும்பெயரே 47

மாட்டுத் தலைநீ மாற்றினையே
மனசிற் றுயரை ஆற்றினையே 48

கண்ணிழந் தோர்க்குக் கண்ணளித்தாய்
களவுப் பொருளுக் குளவுசொன்னாய் 49

அம்மைகொப் புளிப்பான் சின்னமுத்து
அணுகா வுன்சந் நிதிமுகத்து 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறா நோய்களை மாற்றிவிட்டாய்
மாயப்பேய்களைப் பாற்றிவிட்டாய் 51

கங்கா தீர்த்தம் உன்றீர்த்தம்
கடுநோய்க் கவுடத முன்றீர்த்தம் 52

அற்புதம் அற்புதம் அவைகோடி
அளவிடற் குளையுமென் மனங்கோடி 53

பங்குனி மாசத் திங்களம்மே
பக்தஜ னங்களிங் கெங்குமம்மே 54

பொங்க எழுந்த கொழுந்தூமம்
பொன்னுல குக்கோர் பெருந்தூமம் 55

பங்குனி விழாவைக் காண்பாரே
பவவினை களைப்புறங் காண்பாரே 56

பத்தினி தேவியுன் திருக்கோலம்
பாவிக்க வருகுவை யுனக்கோலம் 57

முத்தம முத்திய பவளந்தான்
முகிழ்த்தம தியமுன் வதனந்தான் 58

காரினை மேலிடு மதியந்தான்
கமல மடங்கிய வதனந்தான் 59

நீலமி ரண்டலர் கமலந்தான்
நின்னிரு கயல்பொரு வதனந்தான் 60

காமர வண்டமர் கமலந்தான்
கருணை ததும்பிய வதனந்தான் 61

திங்களொ டிந்திர வில்லுந்தான்
திலகம் விளங்கிய நுதலுந்தான் 62

நீலோற் பலமிரு நயனந்தான்
நீண்டு பிறழ்ந்திடு கயலுந்தான் 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுகொடு சங்குநல் வேயுந்தான்
கவினுறு கண்டமுந் தோளுந்தான் 64

வல்லொடு மலர்முகை மலையுந்தான்
வாரொடு பொருமிரு முலையுந்தான் 65

இல்லையுண் டென்னுமொ ரிதுவேதான்
இருமலை யேந்திய இடையேதான் 66

செங்கம லங்கர கமலந்தான்
செங்காந் தளுங்கர கமலந்தான் 67

பங்கய முன்னிரு பாதந்தான்
பவள நிறந்திரு வுருவுந்தான் 68

சொல்லது கண்டெனு மதுவேதான்
மெல்லெனு நடையன நடையேதான் 69

சாயலும் மயிலெனு மதுவேதான்
சார்ந்தது பயில்வது மயலேதான் 70

செங்கதி ரோனொளி மதியுந்தான்
தேவியு னருளொளி வெள்ளந்தான் 71

என் பூடுருக உயிருருக
என்னா யகமென் னுளம்வருக 72

அன்பே வருக அனம்வருக
ஆருயி ரேயென் அருள்வருக 73

கண்ணே வருக கனிவருக
கற்பின் கொழுந்தே நனிவருக 74

பொன்னே வருக மணிவருக
பூங்கோ தாயென் னுயிர்வருக 75

பக்திபெ றற்கோர் வரந்தருக
பாவ மறற்கோர் வரந்தருக 76

சித்திபெ றற்கோர் வரந்தருக
செந்தமி ழுக்கோர் வரந்தருக 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயக லற்கோர் வரந்தருக
நுண்ணுணர் வுக்கோர் வரந்தருக 78

மாதமும் மாரி வருஷிக்க
நந்தமிழ் நாடு சந்தோஷிக்க 79

மைந்தர்கள் கல்வி பயின்றோங்க
மாதர்கள் கற்பினில் நின்றோங்க 80

பொய்ச்சமயங்கள் தொலைந் தோங்க
புகழ்சைவ சமயமே பொலிந்தோங்க 81

அஞ்செழுத் தொடுமணி நீறோங்க
ஆலயந் தோறுநல் விழவோங்க 82

சற்சனர் சகவாச மேவீங்க
தார்முடி மன்னர்செங் கோல்தாங்க 83

காத்தருள் வாய் கண்ணகிவாழி
காமரு நுஞ்சீறடி வாழி 84

வாழி வாழியுன் னருள்வாழி
வாழ்த்துமெய் யடியரெல்லாம் வாழி. 85

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on.

# இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதியவை

**வெளிவந்தவை:**

- கோயில்
- கதிர்காம வேலவன் பவனிவருகின்றான்
- கந்தபுராணம் தக்ஷகாண்டம் - உரை
- பாரத நவமணிகள்
- சைவ நற்சிந்தனைகள்
- கந்தபுராண கலாசாரம்
- கந்தபுராண போதனை
- இருவர் யாத்திரிகர்
- சமயக் கட்டுரைகள்
- சிந்தனைக்களஞ்சியம்
- ஆறுமுகநாவலர்
- நாவலர்
- இலக்கிய வழி
- கம்பராமாயணக்காட்சிகள்
- அன்பினைந்திணை
- அத்வைத சிந்தனை
- செந்தமிழ்க் களஞ்சியம்
- திருவருட்பயன் - உரை

**அடுத்த வெளியீடு:**

- சமயக் கட்டுரைகள் (மறுபிரசுரம்)

**வெளிவர இருப்பவை:**

- கீதையும் துறவும்
- வெளிவந்தவைகளின் திருத்தப்பதிவுகள்
- பாரதக்கதைகள்
- தனிக் கட்டுரைத் தொகுதி
- விசேட கட்டுரைத்தொகுதி
- சொற்பொழிவுக் குறிப்புகள்
- I இலக்கியம், II புலமை, III தமிழ், IV திருமுறை
- இலக்கணக் குறிப்பும் படவிளக்கமும்
- இரண்டு கதைகள்
- காரைக்காலம்மையார்
- தெய்வயானை திருமணம்
- அணிந்துரை மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org